REGD. No. 3712.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

வகுளமாலை.

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தினின்று மாதந்தோறும்
வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

"கண்ணன் கழலிணை
நண்ணும் மனமுடையீர்!
எண்ணும் திருநாமம்
திண்ணம் நாரணமே" — வகுளாபரணர்.

"அகரமுதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"
"தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க்கல்லால்
மனக்கவலை மாற்றலரிது" — திருவள்ளுவர்.

"உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெறுத்தலு நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடை யாரவர்
தலைவரன்னவர்க்கே சரணங்களே" — கம்பர்.

தொகுதி 1. } ஈசுவர ஹு கார்த்திகைமீ { பகுதி 11.
Vol. 1. } DECEMBER 1937. { No. 11.

உள்ளுறை.

1. வருணப்பான்மை. பத்திராசிரியர். 165.
2. திருவாய்மொழி அநுபவம். ஸ்ரீ உ.வே. ஏ. வி. கோபாலாசாரியார். 174.
3. திருப்பாணாழ்வார். பாரத்வாஜி. 177.
4. திருத்தாடாளன் பெருமை. 179.
5. வர்த்தமானங்கள். ஸ்ரீமான் ப. ரெ. திருமலை ஐயங்கார். 181.
6. முக்கிய அறிவிப்பு. ,, ,, 185.

பத்திராசிரியர்:—
ஆர். கேசவய்யங்கார், M.A.B.L., அட்வகேட்.

வருஷம் 1-க்கு ரூ. ஒன்று] [தனிப்பிரதி அணா ஒன்றரை

சௌத் இண்டியன் ஸ்டோர்ஸ்,

திருவல்லிக்கேணி.

நேர்த்தியான மளிகை சாமான் நேராகத் தருவித்து செட்டு ரெம்பக்கம்மியாக்கி சீக்கிரத்தில் கொடுக்கிறோம். நேரிலே மின்சாரத்தில் வறுத்தரைத்த காப்பியும், கடைந் தெடுத்த கட்டியான வெண்ணெயும் நறுமணத்த புத்துருக்கு மேன்மையான நெய்யும், குழையாத பழவரிசி வியன்மிக்க வமுதாகும், சீக்கிரத்தில் மாவு போல் குழைந்து போகும் ருசியான பருப்பும், பார்த்தவரும் கேட்டவரும் பரிவுடனே வாங்கிடுவார். மிக்க புகழ் பெயர் பெற்ற பரிமளப் பாக்கு சீராக வுடைத்து உயர்ந்த நல்ல வாசனைச் சரக்கு நெய் யுடனே சேர்த்து வேண்டு மட்டும் விற்கிறோம். இக்கடை யில் இடைவிடாது வாங்குவோர்க்கு இக்கட்டே இருக் காது. மிக்க பல முண்டாகும். நிரம்ப அறிவும் ஊறும்.

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

வகுளமாலை.

தொகுதி 1. Vol 1.	ஈசுவர௵ கார்த்திகை௴ DECEMBER 1937.	பகுதி 11. No. 11.

வருணப்பான்மை.

மறைமுடியணங்கெழுந்தோங்கரங்கர் தாளிரங்கச்செல்லும்
நெறிகெழுமணிகணங்களிணங் கொலியிலங்குமின்பத்
துறைநலச்சுருதிமாறன் தூமொழிச்செழுமைமெய்ப்பாட்
டுறைவகையுவகையொன்றுமுயர் திருவுடையவர்க்கே. (1)

துணிந்ததாமரைக்கணானே தன்னதாமறைக்கண்மிக்கான்
அணியென அணைக்குமாழியாமிறைச்செங்கோலோச்சிப்
பணிவிடைதுணிவார்க்கண்ணல் பணித்திடவெண்ணுமெண்ணத்
துணைவனாயணையெனத்தன் திணையறம்வகுத்தான்தீரன். (2)

காக்கவேயாக்கிநீக்கும் கடவுளையாக்கைபூட்டி
நீக்கருநிமலநீதி நிறைமறையிறையுயர்த்தோன்
ஆக்கினைஎன்றவொன்றை அவக்கினைகடந்தேசெய்த
போக்கறைத்தாக்கானாகில் பேடியாய்ப்போவனென்றார். (3)

இக்கரையுலகுமுற்றப்படைத்தெழில் பரந்தவேதன்
அக்கரநெறிக்கணுற்ற சக்கரமுருட்டும்செப்பம்
திக்கரம்செய்தார் புக்கதிக்கெலாம்தாக்கிநீக்கி
அக்கரம்கொண்டே அண்ணலறநிலைநாட்டுவானே. (4)

ஸ்ரீயபிதயச்செய்யாள் செவ்வியசுருதிச்செம்மல்
காரியமனைத்துமாகும் காரணக்கருணைக்கண்ணன்
தேரியவிறவோர்கன்மம் வீயவேதுய்யதேவன்
பேருருயாப்புக்கூட்டிப்படைப்பெனச் சமைத்தான்செய்யுள். (5)

காத்தலாங்கருமமாகி யாத்தலாமுருவமாகிக்
கோத்தலாங்கண்ணியாகிக் கொள்ளலாங்கருத்துமாகி
எத்துநாமனத்தரோதுமேதமில் வேதம்நான்கும்
சாத்தியேவருணம்நான்காயாத் திகரறம்வகுத்தான். (6)

கடவுளாய்க்கவிகட்கெல்லாம் கடலிடைக்கிடந்தகோமான்
படையிறையாழிதன்னுபரு கொடையுடையகையான்
நடைபெறுதருமமாகு நால்வகைவருணயாப்புத்
தொடையுறுதுய்யகோப்பாய்த் துயரறவகுத்தான்வையம். (7)

படைப்பெலாம்தானே யென்னப்படுமறையறையுமாற்றான்
அடையெனவவைகள்யாவும் தடையறவடையக்காக்கும்
கொடையறமுடையசீமான் கழலிணைநிழலாய்வாழ
அடைக்கலம்புகுதலாறென்றடியவர்க்கன்னான் சொன்னான். (8)

தன்னுடலாகும் உலகம் யாவையும் படைப்பென்னும் முறை
யால் விரித்துப்பல்கக்கருதிய பரம்பொருளே நெறிமுறை நால்வகை
வருணமாய் விளங்காநின்றான் என்று அவன் கருத்தாகிய வேதம்
முழங்கா நின்றது. வாச்சியனாகிய பரன் அவ்வாறு விளங்கிய
வாறே அவனது வாசகமாகிய வேதமும் நால்வகை வருணயோநி
யாகும் நான்மறையாய்த்திகழா நின்றது. நால்வகை வருணமாயே
பரன் உலகுபடைத்து நாமரூபவ்யாகரணம் பண்ணித்து மறைவிரித்து
உலகுக்கோர் முழுமுதற்குருவாய் விளங்காநின்றான். பரனுடைய
சரீரபூதமான உலகு வேதமயனான பரனாலேயே அநுப்ரவேசிக்கப்
பட்டு வேதமொழிகொண்டே ஆக்கை அளிக்கப்பட்டு நாமமிடப்
பட்டு நாமரூபங்களோடு விளங்கிற்று. நாமரூபவ்யாகரணமயமான
ப்ரபஞ்ச வ்யஷ்டிஸ்ருஷ்டியை ஜீவஸமஷ்டிவிசிஷ்டனான பரனே
செய்கிறான் என்றும், "ரூபம்" என்றதற்கு "சரீரம்" (யாக்கை)
என்றது பொருள் என்றும், எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யத்தில் விஸித்
தார்ந்தம் செய்துள்ளார். "நாமரூபவ்யாகரணம்" என்றதையே
"ஸம்ஞாமூர்த்திக்லுப்தி" என்று வ்யாஸபகவான் ஸூத்திரமோதி
யுள்ளபடியால் "ரூபமும் மூர்த்தி"யும் ஒருபொருட்கிளவியென்றது
தெரியலாம். நாமரூபமயமாயே விளங்குமிவ்வுலகு முற்றவுமே நால்
வகை வருணப்பாகுபாட்டானே கட்டப்பட்டு விளங்குகின்றது.
பரனாகி ஆக்கியதே ஆக்கை. பரன் ஓதிச்சாத்தியதே நாமம்.

அவ்வாக்கையே உரு. அந்நாமமே பேர். ஈதே பரன்பணித்த பேருருவிலக்கணம் (நாமரூபவ்யாகரணம்). ஈதே சாரீரகசாஸ்த்ரம் விளக்கிய படைப்புமெய்ம்மை. இம்மெய்ம்மையே எம்பெருமானர் தரிசனமெய்ம்மை. இம்மெய்ம்மையை மதிநலமருளப்பெற்ற ஆழ்வார்களும், மாசில்மனந்தெளி முனிவர்களும், நன்கறைந்தருளிய வற்றுட்சிலவற்றையே இங்கண் எடுத்துக்காட்டி அவைகட்கெல்லாம். வித்தாகிய மறைச்சான்றுகூறி இக்கட்டுரையைத் தலைக்கட்டுவாம்.

"குறிப்பில்கொண்டு நெறிப்பட உலகம் மூன்றுடன் வணங்குதோன்று புகழ்ஆணை......" என்று 'பூர்புவஸ்வஸ்தரு' வாயே தமக்குமதிநலமருளிய காரணப்பொருளை நம்மாழ்வாரும், "நெறிமுறைநால்வகை வருணமுமாயினை" என்று பல்கக்கருதிய (பஹுபவநஸங்கல்பம் செய்த) நால்வகை வருணக்காரண வடிவனைக்கண்டு மகிழ்ந்த மங்கையர்கோனும், "நால்நிறத்தவேத நாவர்" என்று வேதமாகிய வாசகப்பிரமத்தை பரம்பொருள் திருவருளாலே நால்வகை வருணத்ததாயே ஸாக்ஷாத்கரித்த திருமழிசைப் பிரானும், அம்மெய்ம்மையை விளக்கியருளினர்கள். வாச்சிய வாசகங்கள் செறிந்த இப்பிரபஞ்சம் நால்வகை வருணமாயே விளங்குகின்றது என்றதற்கு ஆழ்வார்கள் அருளிச்செயல்களே தக்கசான்றுபகர்வனவாம். இத்திறவருணப்பாகுபாட்டின் கண்ணே விளங்கும் ப்ரபஞ்சமனைத்துக்கும் நாமரூபவ்யாகரணமே அடி என்றதே உபநிடதர் மரபு. ஈதேபரன் உலகென்னும் தனதியந்திரத்தை ஆக்கி ஆட்டுவிக்கும் ஆறு. இவ்வாறே அவனது மாயை என்னப்படும். "யந்த்ராரூடாநிமாயயா; ப்ராமயந்ஸர்வபூதாநி" என்று கருப்பொருளாகிய கண்ணன்தானே படைப்பு என்னும் தனது தருமயந்திரத்தின் பான்மையைப்போர விளக்கியருளினன். தன் கருத்தாகிய மறையொன்றாலேயே உணரப்படவேண்டியிருத்தலான் அக்கருத்தை மாயை என்றும், அம்மாயையாமறமொன்றாலேயே படைப்பு முற்றவுமேயாக்கப்பட்டிருத்தலால் அதனையே யந்திரம் என்றும் உணர்த்தினன். அத்திற அறப்பொருளை அறிஞர் நன்கு ஒருமாறுவேதம் தமிழ் செய்த மாறனார் தாமே "அமைவுடை அறநெறி முழுவதும் உயர்வற உயர்ந்து அமைவுடை முதல்கெடல் ஒடிவிடையற நிலமதுவாம் அமைவுடையமரும் யாவையும் யாவரும் தானும்

அருமையுடை நாரணன் மாயையை அறிபவர்யாரே" என்று தெளிவித்தருளினர். இப்பெற்றித்தாய படைப்புக்குப் பேருருவிலக்கணமே (நாமரூப வ்யாகரணமே) அடியென்றும், அவ்வியாகரணம் வகுத்தே உலகுய்யுமாறு அருமறை விரித்த அப்பரனே ஆதியம் பகவன் என்றும், தனிமுதற்குரு வென்றும். ஆசிரியனென்றும் சடகோபர் பரக்க நிரூபித்துள்ளார். எண்ணரிய அந்நிரூபணங்களின் அருமைபெருமைகளை ஈடு முப்பத்தாறாயிரப்படியோதியுணர்க. "எம்பெருமான் பேரும் ஓராயிரம் பிறபலவுடைய எம்பெருமான் பேருமோருருவமும் உளதில்லை இலதில்லை பிணக்கே" என்றும் "பிணக்கற அறுவகைச்சமயமும் நெறியுள்ளியுரைத்த கணக்கறு நலத்தனன் அந்தமிலாதியம்பகவன், வணக்குடைத்தவநெறி வழி நின்று புறநெறிகளை கட்டுஉணக்கு மின்பசையற அவனுடையுணர்வு கொண்டுணர்ந்தே." என்றும், அன்னவன் "இறைநிலை உணர்வரிது" என்றும், "கொப்பூழ்ச் செந்தாமரைமேல் திசைமுகன் கருவுள் வீற்றிருந்து படைத்திட்ட கருமங்களும் பொருவிலுன் தனிநாயகமவை கேட்குந்தோறும் என் நெஞ்சம் நின்று அருவிசோரும் கண்ணீர் என்செய்கேன் அடியேனே" என்றும், "ஞானவிதி பிழையாமே......மேவித்தொழும் அடியாரும் பகவரும் மிக்கதுலகே" என்றும், "பண்டேபரமன் பணித்த பணிவகையே" என்றும், "கருமமும் கருமபலனுமாகிய காரணன்" என்றும், அறமென்னும் அவனதாணை கடவாமையே அவனருள் பெறுதற்கு உறுப்பாம் என்றதை "செய்யேல். தீவினை என்றருள் செய்யும் என்கையார்சக்கரக் கண்ணபிரானே" என்றும், "உன் பொன்னடிக்கடவாதே வழிவருகின்ற அடியோர்க்கருளி" என்றும், "காக்குமியல்வினன் கண்ணபெருமான் சேர்க்கைசெய்து தன் னுந்தியுள்ளே வாய்த்த திசைமுகன் இந்திரன் வானவர் ஆக்கினான் தெய்வ உலகுகளே." என்றும், "கமலக்கண்ணன் என் கண்ணினுள்ளான் காண்பன் அவன் கண்களாலே அமலங்களாக விழிக்கும் ஐம்புலனும் அவன் மூர்த்தி கமலத்தயன் நம்பி தன்னைக்கண்ணுதலானொடும் தோற்றி அமலத்தெய்வத்தோடு உலகமாக்கி என் கண்ணினுளானே" என்றும், "உருவாகிய ஆறுசமயங்கட்கெல்லாம் பொருவாகி நின்றானவன் எல்லாப்பொருட்கும் அருவாகிய ஆதியைத்தேவர் கட்கெல்லாம் கருவாகிய கண்ணனைக்கண்டு

கொண்டேனே" என்றும் "நாவினுள் நின்று மலரும் ஞானக்கலைகளுக்கெல்லாம் ஆவியும் ஆக்கையும், தானே" என்றும், "அறப்பொருளை அறிந்தோரார் இவை யென்ன உலகியற்கை" என்றும், தமக்கு தருமக்காட்சியையும், நாமரூபவ்யாகரணக் காட்சியையும் ப்ரதானப்ரதிதந்த்ரக் காட்சியையும், பரன் அருளியதைக் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்ப்பக்கைதொழுதேற்று, ஆர்வத்தால் பாடி, அடியார்களுக்களித்திட்ட இப்பசுந்தமிழ்ப்பயிற்சி பொலிந்த புண்ணியர்கட்கு வருணச்செவ்வி கண்கூடாகும். ஆழ்வார் தாமே "வேதப்புனிதவிருக்கு" என்றோதிய, புருஷஸூக்தப்பொருள், தமக்குப்பரன் திருவருளாலேயே கண்கூடாகிய தென்றதற்கு இத் திறப்பாசுரங்களே தக்கசான்றாகும். மதிநல மருளப்பெற்ற அடியாரனைவரும், மறைகட்கெல்லாம் தலையாய் விளங்கும் இப்புருஷ ஸூக்தக்காட்சியே பரனால் அருளப்பெற்றார்கள் என்றதை துருவர் சரித்திரம் கொண்டே நன்கு தேறலாம். "சங்கப்ராந்தேநகோவிந்த: தம் பஸ்பர்ச க்ருதாஞ்சலிம்" என்று பரனால் தன[illegible] வேதமயமான புரிசங்கம் கொண்டே மதிநலமருளப்பெற்றவாறே "ஸஹஸ்ரசீர்ஷாபுருஷ: ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரபாத்" என்று தொடங்கி, அறநெறி நால்வகை வருணமாகிய விராட்புருஷனையும், அவனது நால் நிறத்த வேதத்தையும், அத்தகைய பாகுபாட்டாலேயே வகுக்கப்பட்டு விரிந்து விளங்கா நின்ற பரனது உடலாகிய, தேவர், மக்கள், விலங்கு, தாவரம், என்ற படைப்பை முற்றவுமே கண்டு, பரன் என்பான் உடன்மிசை உயிரெனக்கரந்து தங்கும் பரந்து விளங்கா நிற்கும் பெற்றியன் என்று ஞானக்கண்கொண்டு அத்துருவன் கண்டு மகிழ்ந்தான். இப்பெருமையைப் பராசரபகவான் பணித்தபடியோதி, விஷ்ணுசித்தர் உரையுள்ளிக் காண்க. "ஜகத்ஸர்வம் சரீரம்தே" என்று நான்முகக்கடவுள் வாயிலாகவும், "சரீரேதவபச்யாமி ஜகத்ஸர்வமிதம் ப்ரபோ" என்று விச்வாமித்ர பகவான் வாயிலாகவும், "ரக்ஷிதா ஜீவலோகஸ்ய" என்றும், "ரக்ஷிதாஸ்வஸ்யவ்ருத்தஸ்ய தர்மஸ்யச" என்றும், "லோகஸ்ய சாதுர்வர்ண்யஸ்ய ரக்ஷிதா" என்றும், "மர்யாதானாம் சலோகஸ்ய கர்த்தா காரயிதாசஸ:" "ஸத்யதர்மபராச்ச்ரீமாந்" என்றும், "பாவோநாந்யத்ரகச்சதி" என்றும், ஐந்த்ரவ்யாகரண பண்டிதனை திருவடி வாயிலாகவும், நெறிமுறை நால்வகைவருணமாய் விரிந்ததையே

பாத்துவ இலக்கணம் என்று வான்மீகி பணித்தார். இவ்வாறு வகுக்கப்பட்டதே வகை. இவ்வாறு வரையறுக்கப்பட்டதே அறம். ஈதோர் நால்வகைத்து. வேத வைதிகக்கலை யனைத்தும் விளக்கியுள்ளது இவ்வகையே. ஸர்வசரீரியான பரன் இவ்வகை யொன்றிலேயே வழிபடப்படுவான். வழிபடப்படுமாறே இவ்வகை வகுத்துள்ளான். அடியார் வழிபடும் வகை ஈதொன்றேயாம். "குடிகுடியாட் செய்யும் தொண்டரோர்க்கருளி" என்றும், குடிக்கிடந்தாக்கம் செய்து நின் தீர்த்தவடிமைக்குற்றேவல் செய்துன் பொன்னடிக்கடவாதே வழிவருகின்ற அடியோர்க்கருளி" என்றும், ஆழ்வார் அடியார்கட்கிவ்விலக்கணமே வகுத்தருளினார். "சாஸ்த்ரங்களிற் சொல்லுகிற முறைதப்பாதபடி வந்து அடிமைசெய்கிற அடியோங்கள் பக்கலிலே க்ருபைபண்ணி" என்றும், "குலமர்யாதை தப்பாதபடிவர்த்திக்கை" என்றும், உன்னுடைய ஆஞ்ஞாதிலங்கநம்பண்ணாதே, உன் திருவடிக்குத்தப்பாதே" என்றும், நம்பிள்ளை உரையிருளியுள்ளார். பரனை, சேதநர்கள் வழிபட இவ்வருண வகையல்லாற் பிறிதோர் வகையில்லை என்றே பராசரர் அறுதியிட்டார். "வர்ணச்ரமாசாரவதா புருஷேணபர: புமாந்| விஷ்ணு: ஆராத்யதேபந்தா நாந்யஸ்தத்தோஷகாரக:|" என்றும், "ஸ்வதர்மதத்பரோவிஷ்ணும் ஆராதயதிநாந்யதா" என்றும், "வர்ணாச்ரமேஷு யே தர்மா: சாஸ்த்ரோக்தாந்ருபஸத்தம| தேஷு திஷ்டந்நரோ விஷ்ணும் ஆராதயதிநாந்யதா||" என்றும், வருணநெறிகாத்து வழிபடுதலே வைணவர்கட்கு வகுக்கப்பட்டதென்று பராசரர் பணித்தார். அந்நெறி காவாக்கால் பரன் ஆட்கொள்ளான் என்றதை சம்புகன் வரலாறு காட்டி வான்மீகி விளக்கினர். "செறிதவச்சம்புகன் தன்னைச் சென்றுகொன்று" என்று குலசேகரப்பெருமாள் வருணநெறித் தூய்மையைப்பின்னும் வலியுறுத்தியருளினார். உலகுக்கும் பரனுக்கும் உற்றசரீராத்ம ஸம்பந்தத்தை உடன்பட்டார்க்கு வருணநெறி இன்றியமையாததென்றது மநுநூல் துணிபு. பரன் திருவடியையே அவாவிநிற்கும் பத்தர்க்கு மநுநூல்விடலரிய வொன்றென்றது (நிரவகாச சாஸ்த்ரம் என்றது), பிரமசூத்திரஸ்ம்ருத்யதிகரண ஸித்தாந்தம். திருமந்த்ராதிகாரம் விரித்தபெரியோர் பணிப்புக்கெல்லாம் மநுவின் திருவாக்கே தஞ்சமாயிற்று. அம்மநுதாமும் "ஸோபித்யாய சரீராத்ஸ்வாத்ஸிஸ்ருக்ஷு: விவிதா: ப்ரஜா:|"

என்றும், "ஸந்நிவேச்யாத்மமாத்ராஸு ஸர்வபூதாநி நிர்மமே" என்றும், "தஸ்மாத் சரீரமித்யாஹு: தஸ்யமூர்த்திம்மநீஷிண:" என்றும், 'ஸர்வேஷாம்துஸநாமாநிகர்மாணி சப்ருதக்ப்ருதக்| வேத சப்தேப்ய ஏவாதௌப்ருதக் ஸம்ஸ்தாச்சநிர்மமே ||" என்றும், சரீராத்ம ஸம்பந்தஸத்யத்தையும், தொழிற்பாகுபாட்டையும், நாமரூப வ்யாகரண நுட்பத்தையும் விளக்கியுள்ளார். "தாநிஸர்வாணிதத்வபு:" என்றும், "நாமரூபம்சபூதாநாம் க்ருத்யாநாம்ச ப்ரபஞ்சநம்| வேதசப்தேப்யஏவாதௌ தேவாதீநாம்சகாரஸ:||" என்றும், பராசரபகவான், சரீராத்ம ஸம்பந்தத்தையும், வருணப்பாகுபாட்டையும், நன்மை தீமைகளுக்குக் கட்டளைக்கல்லாயே வருணந்தோறும் யாக்கைதோறும் முறையால்வேறுபடும் தொழிற்பாகுபாட்டையும், பரன் வேதமொழிகொண்டு வகுத்தருளியதைப் பலபுடைகளில் பொதுவாயும், முதலம்சம், ஐந்து, ஆறு, அத்தியாயங்களில் சிறப்பித்தும் விரித்துள்ளார். ஈதே வகுத்தான் வகுத்தவகையாம். ஈதல்லால் கோடி தொகுத்தார்க்கும் துய்த்தலரிதேயாம். இவ்வாறு தன்னைவழிபடவே, பேருருவிலக்கணமமைத்து நால்வகை நெறி வகுத்துத் தொழிற்பாகுபாடு செய்து, பிறப்பொழுக்கம் விளக்கி, உலகனைத்தும் தனதாக்கையென ஆக்கிக்காக்குமியல் வினனை பரம்பொருளே ஆதியம்பகவன் என்றதே ஆழ்வார் திருவுள்ளம். ஆண்மையும் அருண்மையும் ஒன்றி ஒருங்கியபரனே உலகாய்ப்பரந்து விளங்காநின்றான் என்றதே மிக்க வேதியர் வேதத்தின் உட்பொருள். ஆண்மைக்கு உறுப்புவருணம். அருண்மைக்கு உறுப்பு சரணம். ஆண்மையும் அருண்மையுமொருங்கியதே பரம்பொருண்மை. ஈதே பரன்பாடிய கீதைப்பொருளாம்: அப்பரன்தானே ஆங்குத்தனதவதாரப் பயன் கூறுமிடத்து, வருண நெறிகாத்தலைக் காட்டியுள்ளான். "யதாயதா ஹி தர்மஸ்யக்லாநி:", "அப்யுத்தாநம் அதர்மஸ்ய", "பரித்ராணய ஸாதூநாம் விநாசாயச துஷ்க்ருதாம்" என்ற பரன் பாசுரங்களுக்குத்திருப்பாடியம் அருளுமிடத்து "தர்மம்" என்றதற்கு, "வேதம்வகுத்த நால்வகை வருண முறையாலும், ஆச்சிரமமுறையாலும், வரையறுக்கப்பட்டு நிலைநின்ற தொழிற்பாகுபாடு" என்றும், "ஸாது"க்கள் (நல்லார்கள்) என்றதற்கு, "மேற்கூறிய இலக்கணத்தை உடைத்தாய தருமசீலரான வைணவத்தலைவர்கள்." என்றும், எம்பெருமானார் தாமே

விளக்கிய வாற்ருன், வருணநெறிகாப்பாரே வைணவத்தலைவர்கள் என்றும், வைணவத்தலைவர்களேவருணநெறிகாக்கும் கடப்பாடுடையார்களென்றும் இந்நெறிகாத்துத்தன்னை வழிபடும் வைணவர்களைக்காத்தற் பொருட்டும், இவ்வருணநெறிக்கு மூரண்பட்டதே "அதர்மம்" என்றும், அது செய்வார்களை நீக்கற்பொருட்டுமே, பரன் அவதரிக்கிருன் என்றும், அன்னவர் அருளிய திருப்பாடியம் கொண்டே வருணச்செவ்வி நன்கே தெளியலாம்.

இத்திற ஆழ்வார், எம்பெருமானுர், இருடிகள் பணித்தவிரிவுக்கெல்லாம் வேதமேவித்தாய் விளங்கியது. நாமரூபமயமாயே விளங்கும் இப்ரபஞ்சத்தின்கண் வருணமற்ற பொருளே இல்லை என்றது உபநிடதர் துணிபு. ப்ரபஞ்ச சரீரகனை வாச்சியனுக்கே "ப்ராஹ்மணோஸ்யமுகமாஸீத் பாஹூராஜந்ய: க்ருத:| ஊரூததஸ்யயத் வைச்ய: பத்ப்யாம் சூத்ரோ அஜாயத||" என்ற இலக்கணத்தை வேதம் நால்வகை வருணங்கொண்டு வகுத்தபடியே, பூதயோநியாகிய வேதமென்னும் வாசகப்பிரமமும் அம்முறையாலேயே வகுக்கப்பட்டு விளங்கிற்று. "ருக்ப்யோஜாதம் வைச்யம் வர்ணமாஹு: யஜுர்வேதம் க்ஷத்ரியஸ்யாஹுர்யோநிம்| ஸாமவேதோப்ராஹ்மணாநாம்ப்ரஸூதி: பூர்வேபூர்வேப்யோவசஏததூச:||" என்று, சாமம், யசு, இருக்கு, அதர்வம், என்ற இவை நான்கும் முறையே ப்ராஹ்மண, க்ஷத்ரிய, வைச்ய, சூத்ர, ப்ரஸூதிபூதங்களை என்று வேதமேவிளக்கிற்று. ஸர்வாந்தர்யாமியின் சரீரபூதமான ப்ரபஞ்சமனைத்துக்கும், அவனதுவாசகமான வேதத்துக்கும், உற்றதே இத்திறவருணப்பாகுபாடு. நான்காவது வருணயோநி 'அதர்வம்' என்றதை, "பத்தஏகவிம்சந்நிரமிமீத" என்று வேறிடத்தோதப்பட்டதற்கு "ஏகவிம்சமதர்வாணம்" என்று பராசரர் விரித்ததுகண்டு "பத்ப்யாம்" "பத்த:" என்ற வேதமொழிகள், அவ்வருணயோநியாகிய அதர்வச்சுட்டென்று தெளிக. படைப்பு ப்ரகரணத்தில் வேதத்தாலும, பராசரபகவராலும், மக்களுட்போல், தேவர் விலங்குகளுக்குள்ளும் நால்வகை வருணமுண்டென்று விரிக்கப்பட்டது. பிரமன் முதல வருணம், இந்திரன் இரண்டாவது வருணம், மருத்துக்கள் மூன்ருவது வருணம், அச்விநீ தேவதைகள் கந்தருவர்கள் நான்காவது வருணம் என்றும், அவ்வருணங்கட்கேற்பனவாய "ப்ராஜாபத்யம்", "ஐந்த்ரம்" "மாருதம்" "காந்தர்வம்", என்று

நிலங்களும் வகுக்கப்பட்டுள்ளன. விலங்குகளுக்குள்ளும், வெள்ளாடு முதல்வருணம் என்றும், செம்மறியாடு இரண்டாவது வருணமென்றும், பசு (ஆ) மூன்றாவது வருணமென்றும், குதிரை நான்காவது வருணமென்றும், வருணம் ஓதப்பட்டுள்ளது. மறைவகுத்துள்ள வருணக்கூறுபாட்டுள் சிலவற்றையே இங்கண்வரைந்தோம். பிறவும் நோக்கிக்கண்டு கொள்க. தாவரங்களுக்கும் வருணமுண்டென்றதை நிலப்பாகுபாட்டிலும், ஆகமங்களிலும், காணலாம். "தேவாத்யா: ஸ்தாவராந்தாச்சத்ரைகுண்ய விஷயே ஸ்திதா:" "ஏவம்பூதாநிஸ்ருஷ்டாநிசராணி ஸ்தாவராணிச" என்று பராசரரும் 'தேவர் தொடக்கமாய், தாவரமீறாக, உள்ள சேதநர்கள்" என்று உரையிட்ட விஷ்ணுசித்தரும், இக்கருத்தைக் குறிக்கொண்டார்கள். தாவர வருணங்களைக்கியே ஆலயங்களில் விக்ரஹப்ரதிஷ்டையையும், சிலாபரீக்ஷா பூபரீக்ஷாதிகளையும் விதித்துள்ளதென்று ஆகமம் வல்லார்கள் கூறுகின்றார்கள். சந்தங்களுக்கும் வருணம் ஓதப்பட்டுள்ளது. "காயத்ரீ" சந்தம் முதல்வருணம், 'த்ரிஷ்டுப்' சந்தம் இரண்டாவது வருணம், "ஜகதீ" சந்தம் மூன்றாவது வருணம், 'அநுஷ்டுப்' சந்தம் நான்காவது வருணம், என்று வேதம் ஓதிற்று. ஆக, வருணமற்ற பொருள் இப்ரபஞ்சத்திலில்லை என்றது வைதிகமதம். ஆதலபற்றிப் பொருளனைத்தும் வைதிகங்களே. வேதமொழிகொண்டு உலகு ஆக்கப்பட்டபடியால் சொல்லும் பொருளும் வைதிகங்களே. இவ்வைதிகப் பேருருவிலக்கணம் கொண்டே எம்பெருமானுர் "வைதிகங்களே லௌகிகங்களுமாம்" என்றறுதியிட்டார். இவ்வாற்றால், ஆண்மை பரந்து அருள்சுரந்த பரம்பொருளே, பிரமன் தொடக்கமாய்த்தம்பமீறாகப் பொருளனைத்தையும் தன்னுடலெனவரையறுத்துத் தருமத்தால் தானே தாங்கிக் காக்கும் இயல்பினனாய் விளங்குகின்றான் என்று பரதத்துவம் தெளிவிக்கப்பட்டது. இம்முறையானே பொருளனைத்தும் பரன் உடைமையாய் விளங்காநின்றன. அவன் உடைமையாயே அவை யாவும் பொருள்களாயின. இவ்வாறே சொல்லனைத்தும் அவன் சுட்டேயாயின. அவன் சுட்டாயே அவைகள் சொற்களாயின. நற்பொருள் அவன் உடைமை. நற்சொல் அவன்சுட்டு. ஈதே பேருருவிலக்கணம். பேருக்கு இலக்கணம் வ்யாகரணம். பொருளுக்கு இலக்கணம் வருணம். இவ்வாறு கருப்பொருளாகிய இலக்

கியத்துக்கு நாமரூபவ்யாகரணம் இலக்கணமாயிற்று. இதைவரும் பகுதியில் பின்னும் விரிப்போம்.

வன்றருமமென்ற திருவென்றுமுளதொன்றும்
குன்றுபொருளாகிய குணக்காமதன்றும்
நின்றதனதாணையென நன்றவனினைந்தே
அன்றருணிறத்த மறையாண்டவன்பணித்தான். (1)

நள்ளந்தகாரங்கடந்தார் நடந்தே
கொள்ளீறிலவ்வின்பம் துய்த்தற்பொருட்டே
கள்ளாவறம்கண்டு கொண்டாடுசிங்கன்
புள்ளேறியாட்கொள்ளும் பண்பேபயில்வாம். (2)

பத்திராசிரியர்.

திருவாய்மொழி அநுபவம்.

(முன்தொடர்ச்சி.)

'ச்வேதாச்வர' ச்ருதியிலுள்ள சரணாகதி மந்த்ரத்தை ஆழ்வார் இங்குத்தமிழ் செய்வதையும் ரஸிக்கவேண்டும். 'யவன் ப்ரஹ்மாவைமுதலில் படைக்கிறானோ, யவன் அவனுக்கு வேதங்களை (ஞானங்களை) ப்ரகாசிக்கச்செய்கிறானோ, என்புத்திக்கு பிரகாசமான அத்தேவனை, துயராறுதற்கு (ஸம்ஸாரத்திலிருந்து மோக்ஷம் அடைய விரும்பி) சரணமாகத் தொழுகிறேன்' என்பது அம்மந்த்ரம். முதலில் உலகத்தைப் படைக்கும் நான்முகனைப் படைப்பதைக்காட்டுவதால் உலகத்துக்கெல்லாம் காரணம்என்பது கருத்து. அதை இங்குமுதலடியில் 'ஆநந்தம்' என்றுபேசி, ஆதிகாரணப்பொருள் என்பதைக் காட்டுகிறார். நான்முகன் படைப்பவன் என்றது ப்ரஸித்தம். நான்முகனையும் படைப்பவன் என்றதால் ஆதிகாரணம் என்றது திண்ணம். "நீயோனிகளைப் படையென்று நிறைநான்முகனைப் படைத்தவன்" என்றதை நினைக. நான்முகனைப் படைத்ததைப்பேசும் சரணாகதி மந்த்ரம், முடிவில் "முனியே நான்முகனி"லும் ஆழ்வார் மனத்தில் ஓடுவது நிச்சயம். "ப்ரஹ்மே சாந்த: ப்ரவேசாத்" என்றது அத்திருவாய்மொழி முதற்பாசுரத்

நாவளீ ஸங்க்ரஹம். "நான்முகன் முதலியவர்களுக்குள் புகுந்து அவர்களை நியமிப்பதால்" என்பது முதல்பாசுரத்தின் ஸாரம். தொடக்கத்திலிருந்து முடிவுவரையில் இந்த சரணாகதி மந்த்ரம் ஆழ்வார் உள்ளத்திலோடுகிறது. வேதங்களை (ஞானங்களை) ப்ரஹ்மாதிகளுக்கும் அருள்வதைக்காட்டும் அம்மந்த்ரத்தின் இரண்டாம் அடியை, இங்கும் "மயர்வறமதி நலமருளினன்யவன்" என்று பொதுவாகக் காட்டியருளினர். எவர்க்கென்று குறிப்பிடாததற்கு இதுவுமோர் கருத்து. நித்ய ஸூரிகளுக்கு அதிபதியான "தேவனை" மந்த்ரத்தின் மூன்றாவது அடிகாட்டியது. "முமுக்ஷு" என்று "துயரறும் அவா"வைக் காட்டுகிறது. "தொழுது" என்று சரணாகதியையும் நான்காம் அடியில் காட்டியருளினர். நான்கு அடிகளாலும், முதல் நான்கு ஸூத்ரங்களின் விஷயங்களையும் காட்டியருளுகின்றார். முதல் நான்கு ஸூத்ரங்களும் நான்கு அத்தியாயங்களின் விஷயங்களையும் காட்டுகின்றனவென்பதையும் விளக்குகிறார். ஆநந்தமான ப்ரஹ்மத்தினிடம் காரணவாக்கியங்கள் யாவும், எல்லையற்ற புருஷார்த்தமாக அழகாக அந்வயிக்கின்றன என்பதை முதலடியில் காட்டுவதால் முதல் அத்தியாயமாகிய ஸமந்வயாத்யாயத்தின் விஷயத்தை ஸூசித்தார். ஸமந்வயாத்யாயத்தில் பரமபுருஷார்த்தமான எல்லையற்ற ஆநந்தமாக ப்ரஹ்மத்தை எல்லா வேதங்களும் காட்டுகின்றன என்ற ஸ்ரீபாஷ்யப் பணிப்பு, ஆழ்வார் முதற்பாசுரத்தில் காட்டியருளிய மார்க்கம். இரண்டாவது அத்தியாயத்தில், ப்ரஹ்ம விஷயமான அறிவில், அஜ்ஞாநசம்சயாதிகளான, மயர்வுகளறுத்தலே காரியம். இதை இரண்டாவது அடியால் ஸூசித்தார். ஜந்மாதி லக்ஷணத்தைச் சொல்வதும், இரண்டாம் அதிகரணத்தில் ஸ்ருஷ்டிஸ்திதிலயமாகிய மூன்று செய்கைகளின் காரணத்வங்களுக்குள் ஒன்றுக்கொன்று விரோதமுண்டோவென்று சங்கித்து, விரோதமில்லை என்றது காட்டப்பட்டிருக்கிறது. இரண்டாவது அத்தியாயத்தில் அவிரோதத்தை ஸமர்த்திப்பதுவிஷயமாகும். ப்ரஹ்ம விஷயத்தில் ஏற்படக்கூடிய மயர்வுகளெல்லாம் அங்கு நீக்கப்படுகின்றன மூன்றாம் அதிகரணமான சாஸ்த்ரயோநித்வத்தில், சாஸ்த்ரமொன்றேதான் ப்ரஹ்மத்தை அறிவிக்கும் சாதகமாகும், என்று தீர்மானிக்கப்பட்டது.. நித்யஸூரிகளென்பதே சாஸ்த்ரமொன்றால்தான் ஸித்திக்கக்கூடுமென்று தத்த்வமுக்

தாகலாபத்தில் காட்டப்பட்டது. நித்யஸூரிகளின் அதிபதியான ஈச்வரன் சாஸ்த்ரமொன்றாலேதான் ஸித்திக்கவேணும். மூன்றாவது அத்யாயத்தின் விஷயம் ப்ரஹ்மத்தை அடையும் ஸாதநங்களை விளக்குதல். அதுவும் சாஸ்த்ரத்தால்தான் சித்திக்கும். ப்ரஹ்ம ஸ்வரூபமும் அங்கே சோதிக்கப்படுகிறது. ஸித்தோபாயமான ப்ரஹ்மம், முக்தி ஸாதநமாதலால், ப்ரஹ்மத்தின் நிர்தோஷ கல்யாணகுணத்வமும், பரமப்ராப்யத்வமும் மோக்ஷம் முதலிய பலங்களையளிப்பது முதலியவெல்லாம் ஸாதநாத்யாயமான மூன்றாவது அத்யாயத்தில் விளக்கப்படுகின்றன என்று அதிகரண ஸாராவளியில் காட்டப்பட்டது. ஸாதநத்தைச் சொல்லவேண்டிய மூன்றாமடியில் நித்யவிபூதி நாயகனான ஸித்தப்ரஹ்மத்தைப் பேசுவதால் ஆழ்வார் இதை ஸூத்ரகாரர் திருவுள்ளமாக ஸூசித்தருளினார். நித்யவிபூதிநாயகனென்றதால் கைங்கர்யோத்தேச்யமான சேஷித்வமெது வோ, அதைச்சரணம் புகுகிறேன் என்று நான்காம் அடியில் பணித்தார். த்வயத்தில் முனவாக்யமாகப் பொருள்கொள்ள வேண்டுமென்றதையும் காட்டியருளினார். கத்யமும் இந்த வழியை அநுஸரித்தது. மூன்றாவது அடியை 'பல' விஷயமென்று கொண்டாலும், த்வய மந்த்ரமார்க்கமாகச் சரணம் புகுகையில் அதை முன்பு அநுஸந்தித்துப் பேசவேண்டிவந்தது. நான்காவது அத்யாயத்தில், ஸூத்ரகாரர், ஸாதநமான பக்தியை தொடக்கத்திலேயே விஸ்தாரமாக விசாரிக்கிறார். அதற்குக்காரணம அது மோக்ஷம்போல இன்பமாயிருப்பதென்பதே. அதையும் ஆழ்வார் ஸூசிக்கிறார். அடி தொழுவதுதானே ப்ராப்யமான மோக்ஷப்பயன். தொழுவதே எழுவதாகும். தொழுவதும் எழுவதும் ஒன்றே என்று ஸூசிக்கிறார். துயரறுவதே, அதாவது, அவித்யை நீங்குவதுமட்டுமே, மோக்ஷமென்றார் பிறர். அவித்யை நீங்குவதோடு, நித்ய ஸூரிகளோடு ஸூரியாய் இன்புற்று ஸாமகாநம்பாடி ப்ரஹ்மத்தைப்பின் சென்று பணிசெய்வதே பேரின்பமான புருஷார்த்தம் என்று நான்காவது அடியில் அடையும் பயனை ஆழ்வார் பேசுகையில், "தொழுகையே" ப்ராபகம் ப்ராப்யமிரண்டுமாகும் என்னும் ரஹஸ்யத்தைக் காட்டுகிறார்.

ஏ. வி. கோபாலாசார்யர்.

திருப்பாணாழ்வார்.

'சீரிய நான்மறைச் செம்பொருள் செந்தமிழாலளித்த பாரிய லும் புகழ்ப்பாண்பெருமாள்' என்றும், 'பாவளரும் தமிழ்மறையின் பயனேகொண்டபாண் பெருமாள்' என்றும், 'காண்பனவும் உரைப் பனவும் மற்றொன்றின்றிக்கண்ணனையே கண்டுஉரைத்த கடியகாதல் பாண்பெருமாள்' என்றும், 'உம்பர்தொழும் மெய்ஞ்ஞானமுறை யூரான்' என்றும், 'உரோகிணிநாள் கார்த்திகையில் உதித்தவள்ளல்' என்றும், 'வம்பவிழ்தார் முனிதோளில்வகுத்தபிரான்' என்றும், 'மலர்க்கண்ணில் வேறொன்றும் வையாதான்' என்றும், அம்புவியில் மதிள் அரங்கர் அகம்புகுந்தான்'என்றும், 'அமலனாதிபிரான்பத்தும் அருளினான்' என்றும், 'செம்பதுமை அருள்கூரும் செல்வனார் என் றும்', 'அன்புலாம் பாண்பெருமாள்' என்றும், 'அம்புவியில் அரங்கர் உருக்கண்டு உகந்தான்' என்றும், 'அகமகிழ்ந்தே அவர் புகழநின்று உயர்ந்தோன்' என்றும், 'அம்புயநேர்தாண் முனிதோள்வைத்திட டான்' என்றும், 'ஏற்றகார்த்திகையில் உரோகிணி உதித்தான்' என் றும் சிறப்பித்துக் கூறப்படும் திருப்பாணாழ்வார் சோழவளநாட்டி லே உறையூரிலே திருமாலினது ஸ்ரீவத்ஸத்தின் அம்சமாய் ஓர் அந் தணனது கழனியிலே நெற்பயிர்க்கதிரிலே அவதரித்தார். நாரத பகவான் போல ஜ்ஞானவைராக்கியங்களோடு ஸங்கீத ஸாமர்த்திய மும் முதிர்ந்து நின்றார் வாய்த்தபுகழ்பாணர்.

'பாண்பெருமாள் பாடியதோர்பாடல் பத்து' என்றும், 'பாணன் ஓதியது ஒரிருநான்கும் இரண்டுமான ஒருபத்து' என்றும், கூறப்படு தலால் இவர் பத்துப்பாடல்களே பாடியுள்ளார் என்பது போதரும். முதற் குறிப்பு என்னும் இலக்கணத்தால் இவரது திவ்வியப்பிரபந்தம் 'அமலனாதிபிரான்' என்ற திருநாமத்துடன் வழங்கி வருகின்றது. இப்பதிகத்தின் அடிவரவு அமலன் உவந்த மந்திசதுரம் பாரம் துண்டம் கைபரிஆலம் கொண்டல் ஆகும். இதில்முதல் மூன்று பாடல்கள் அகார உகாரமகாரங்களிற் றொடங்குகின்றன. நான்கு முதல் ஏழு வரையுள்ள பாசுரங்களின் முதலெழுத்தைச் சேர்க்க 'சபாதுகை' என்றாகின்றது. எட்டாவது பாசுரம் முதற்பாட்டிற் கூறிய 'ஆதிப்பிரான்' பரியனாகிவந்த அவுணன் உடல்கீண்டவன்' என்கின்றது. ஒன்பதாவது பாசுரம் அரங்கத்தரவினணையான் முடிவில்லதோரேழில் தன்நெஞ்சினை நிறைகொண்டவிஷயம் கூறப் படுகின்றது. இறுதிப்பாசுரமான,

'கொண்டல் வண்ணனைக்கோவலனாய்வெண்ணெ
யுண்டவாயன் என்னுள்ளம் கவர்ந்தானை

'அண்டர்கோன் அணியரங்கன் என்னமுதினைக்
கண்டகண்கள் மற்றொன்றினைக் காணாவே'

என்பது இவ்வாழ்வார் காண்பனவும் உரைப்பனவும் மற்றொன்று இன்றிக்கண்ணனையே கண்டு உரைத்த கடியகாதற் பாண் பெருமாள் என்பதைநன்குவலியுறுத்தும். நற்பாணன் அருள் செய்தபாடல் பத்தும் பழமறையின்பொருள் என்பது தேசிகனார் நிர்வாஹம். இப்பதிகத்துக்கு பெரியவாச்சான் பிள்ளை, அழகிய மணவாளப் பெருமாள்நாயனார் என்ற ஆன்றோர் உரைவகுத்துள்ளனர், நம்பாணநாதன் என்றுகொண்டாடிய சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் 'முநிவாஹன போகம்' என்ற மகுடமிட்டு ஓர் அழகிய வியாக்கியானம் இட்டருளியுள்ளார் 'தத்தில் முனிவாகன போகம்மிழைத்தான் வாழியே' எனவருவதுங் காண்க. இப்பிரபந்தம் ஆசிரியத்துறையில் ஒன்பது பாக்களும்கலி விருத்தத்தில் ஓர் பாடலுமாக அமைந்துள்ளது.

பரந்தாமனைக்குறிக்கும்போது அமலன், ஆதிபிரான், விமலன், விண்ணவர்கோன், நிமலன், நின்மலன், நீதிவானவன், ஓதவண்ணன் அண்டர்கோன் என்றும், திருவரங்கச்செல்வனை வாழ்த்துகையில் நீள்மதிளரங்கத்தம்மான், கடியார் பொழிலரங்கத்தம்மான், அரங்கத்தரவினணையான், மதுரமாவண்டு பாடமாமயிலாடரங்கத்தப்மான், அஞ்சிறையவண்டு வாழ் பொழில்சூழ் அரங்கநகர் மேயஅப்பன், அணியரங்கனார் என்றும், திருவேங்கடத்தானைக் கூறுகையில் விரையார்பொழில்வேங்கடவன், வானவர்கள் சந்திசெய்ய நின்றான், என்றும், திருமலையைக்குறிப்பிடுகையில் மந்திபாய் வடவேஙகட மாமலை என்றும், பகவானது பாதாதிகேச அவயவ ஈடுபாட்டில் இறங்குகையில், திருக்கமலபாதம் அரைச்சிவந்த ஆடை, அயனைப் படைத்த தோரெழில்உந்தி திருவயிற்று உதரபந்தம், திருவாரமார்பு, அண்டரண்டபகிரண்டத்து ஒருமாநிலம் எழுமால்வரை முற்றும் உண்டகண்டம், செய்யவாய், முகத்துகரியவாகிப்புடை பரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்டபெரிய வாயகண்கள், கோலமா மணிஆரம் முத்துத்தாமம் முடிவில்லதோரெழில் நீல மேனி என்றும் அநுபவ மேலீட்டால் நடந்ததை என்கண்ணின் உள்ளன ஒக்கின்றது, சென்றதாம் என்சிந்தனை, அடியேனுள்ளத்தின் னுயிர்மேலது. என்னுள்ளத்துள் நின்று உலாகின்றது, அடியேனை ஆட்கொண்டது, அடியேனை உய்யக்கொண்டது, என்னைச் சிந்தை கவர்ந்தது, என்னைப்பேதைமை செய்தது, கண்கள் மற்றொன்றினைக்காணா என்றும், அவதாரங்களைக்கொண்டாடு மிடத்து அவுணன் உடல் கீண்டவன், உலகமளந்து அண்டமுற நிவந்த நீள் முடியன், அன்று நேர்ந்த நிசாசரரை கவர்ந்த வெங்கணைக்

காகுத்தன், சதுரமாமதிள்சூழ் இலங்கைக்கிறைவன் தலைபத்து உதிர வோட்டி ஓர் வெங்கணை உய்த்தவன், கோவலனாய் வெண்ணெயுண்டவன் என்றும் வாயாரவாழ்த்துவார் பாட்டினால் கண்டு வாழும் பாணர்.

செந்தமிழ்ச் செல்வராய தூப்புற்கோன் இப்பத்துப்பாட்டு நீதியறியாத நிலையறிவார்க்கு எல்லாம் நிலை என்றும், வேதியர் தாம் விரித்துரைக்கும் விளைவுக்கெல்லாம் விதையாகும் என்றும் கூறுவதுடன் இப்பத்தில் காவலனும் கணவனுமாய்க் கலந்து நின்ற காரணனைக்கருத்துறக்காண்பதாயும், கோவலனும் கோமானுமான வந்நாள் குரவை புணர்கோவியர் தங்குறிப்பேகொண்டு சேவலுடன் பிரியாத பெடைபோற் சேர்ந்து தீவினையோர் தனிமை யெல்லாந் தவிர்ந்த தாகவும் அருளிச்செய்கிறார். கற்றலிற் கேட்டலே நன்று. திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்.

பாரத்வாஜி.

---

*திருத்தாடாளன் பெருமை அல்லது ஸ்ரீ வாமந வைபவம்.

[லக்ஷ்மீம்மே மாதரம் சாந்தாம்பிதரம்மேமநீஷிணம் | சேஷாத்ரி தேசிகேந்த்ரம் ச நமாம்யார்ய குணோஜ்ஜ்வலம்]

[ப்ராட்விவாகேந வேதாதிசாஸ்த்ர ரத்நகரேணச | சோதித: கேசவார்யேணகிம்சிதத்ரவதாம்யஹம்]

[ஸ்ரீசைல-கேசவா-ரப்தாத்ராவிடீயம். ஸதாம்ஸபா| மாநயந். தீசடார்யாதிந்ஜீயாதாசந்த்ரபாஸ்கரம்]

[ஸ்ரீமதோவாமநஸ்யாஹம் விவக்ஷுாமிதாம்| கதாம்| ப்ராம் சுலப்யேபலேலோபாது த்பாஹுரிவவாமந:]

திருத்தாடாளனென்று காழிச்சீராம விண்ணகரத்தில் (சீர்காழியில்) கோயில்கொண்டருளிய ஸ்ரீத்ரிவிக்ரம பகவானை ஸ்வாமி திருமங்கையாழ்வார் அழைக்கிறார். தாடாளனென்றால் எல்லாவற்றிலுமுயர்ந்தவன், அல்லது பெருமுயற்சியுடையவன், என்றர்த்தம். இந்த இரண்டு அர்த்தங்களும் ஸ்ரீவாமநனிடம் பொருந்தியிருக்கின்றன. ஸ்ரீவாமநனால் பகவான் தபஸ் செய்கையில் பெரு

---

* திருவல்விக்கேணித் தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீ.உ. குறிச்சி சே. ஸ்ரீநிவாஸ வேதாந்தாசார், எம். ஏ., எல். எல். பி., செய்த சொற்பொழிவின் சுருக்கம்.

முயற்சியுடையவனுயிருந்தான். பிறகு ஸ்ரீத்ரிவிக்ரமனுப் வளர்ந்த போது, மஹாபலி முதலியோர் பார்க்க, எல்லாவற்றிலும் உயர்ந்து விளங்கினன். காத்தல் பகவானுடைய விசேஷத் தொழில்களி லொன்று; அது கருணைக்கடலுக்குத்தான் முடியும்; ஆனால் சிற்சில நேரங்களில் தன் எதிரிகளைக் காப்பதற்காகவே அவர்களுடைய உடலை அறுத்தெறிவது, "தென்னிலங்கைக் கோன்முடிகள சிந்துவித்த" பகவானுடைய திருவிளையாடலாகவிருந்திருக்கிறது; ஆயினும் ஸ்ரீவாமநாவதாரத்தில் தன்னைச் சரணமடைந்த இந்த்ரனுக்கு எதிரியாகிய மஹாபலியின் உடலுக்கும் ஒருதீங்கும் இழைக்காமல், அவனுக்கு வாயில் காப்பானுக பகவான் அமர்ந்ததும், இந்த அவதாரத்துக்குக் கருணையால் ஏற்பட்ட பெரும் உயர்வைக் காட்டுகிறது. இதுபற்றியே ஸ்ரீதேசிகனும் "ரக்ஷாவாமந!" என்று, அதாவது எதிரிகளையும் ஒரு தீங்குமின்றி காப்பதற்குக் காப்புக்கட்டிக் கொண்ட திருவாமநன் என்று பொருள்படும்படி கூறியிருக்கிறார்.

விஷ்ணுவும் சிவனும் சேர்ந்து விளங்கும் க்ஷேத்ரங்களுக்கு பாஸ்கர க்ஷேத்ரங்கள் என்று பெயர். அப்பேர்ப்பட்ட ஸ்தலங்களுள் மிகவும் முக்கியமானது தில்லை (சிதம்பரம்). அங்கே அம்பலத்தாடியின் ஆனந்தக்கூத்தைத் தானும் திருமகளும்கண்டு களிப்பதற்காக மாயன் அரவணையில் படுத்திருக்கிறான். அவனைத் திருவடிதொழுதுவிட்டு,

"கருமுகில்போல்வதோர் மேனிகையனவாழியும் சங்கும்
பெருவிறல்வானவர்சூழ வேழுலகும்தொழுதேத்த
ஒருமகளாயர்மடந்தைஒருத்தி நிலமகள்மற்றைத்
திருமகளோடும்வருவான் சித்திரகூடத்துள்ளானே"

என்று, ஸ்ரீவைகுண்டத்திலிருந்து மண்ணுலகில் வந்து, தன்னிடத்தில் அன்புள்ளவர்கள் தன்னைக்கண்ணாரக்கண்டு வாயார வாழ்த்தி மனமாரத்தொழுது நற்கதியடைவதற்காக, பிராட்டிமார், ஆயுதங்கள் இவைகளுடன் தில்லையில் நித்யவாஸம் பண்ணும் இன்பப்பெருக்காம் கருணைக்கடலாம் ஸ்ரீகோவிந்தராஜனின் நீர்மையையும் பெருமையையும் நன்று உணர்ந்து பேசிய பின்னர், திருத்தாடாளனைத் திருவடித்தொழ, திருமங்கைமன்னன் சீர்காழியை நோக்கி எழுந்தருளினர்.

அங்கே நாற்கவிராசப்பெருமானும் இவ்வாழ்வாருடைய

"அங்கமலத்தடவயல்சூழாலி நாடனருள்மாரியரட்ட
முக்கியடையார்சீயம்
கொங்குமலர்க்குழலியர் வேள்மங்கைவேந்தன்
கொற்றவேல்பரகாலன்கலியன்"

என்ற விருதுகளைத்தமக்கே உரியன என்று பெரியார் பிறரும் இனிது இசைய வாதுசெய்து வெற்றிபெற்று அன்னார் வேலையும் பரிசாகப்பெற்றார். இந்த வேலுடன் அர்ச்சாரூபியாகிய ஆழ்வார் தம் திருவவதாரஸ்தலத்தில் இன்றும் விளங்குகிறார்.

வர்த்தமானங்கள்.

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம்.

பெரியாழ்வார் திருநாட்கொண்டாட்டம்:—

1—7—37உ வியாழக்கிழமை மாலை 6-30 மணிக்கு சங்கக் காரியாலயத்தில் பகவத் விஷயம் கீனூர் நரஸிம்மாசாரியார் தலைமை வஹிக்க ஸ்ரீஉபவே குரிச்சி ஸ்ரீநிவாஸ வேதாந்தாசார் ஸ்வாமி 'பெரியாழ்வார் வைபவம்' எனும் விஷயம் பற்றி உபந்யாசம் செய்தார். சபை இரவு 8-30 மணிக்கு முடிந்தது.

ஸ்ரீமந்நாதமுனிகள் திருநாட் கொண்டாட்டம்:—

4—7—37உ ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணிமுதல் 8-30 மணி வரை ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்காரவர்கள் "நாதமுனி பிரபாவம்" எனும் விஷயம்பற்றி அரியதோர் உபந்யாசம் செய்தார் சங்கக் காரியாலயத்தில்.

ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகள் திருநாட் கொண்டாட்டம்:—

சங்கக் காரியாலயத்தில் 11—7—37உ ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணிமுதல் 8-45 மணிவரை ஸ்ரீமான் யஸ். சோமசுந்தரம் செட்டியாரவர்கள் 'ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகள் மஹிமை' எனும் விஷயம்பற்றி உருக்கமாக உபந்யசித்தார். இடையில் ஸ்ரீபார்த்தசாரதி ஸ்வாமி ஸேவை தந்தருளினார்.

ஸ்ரீ ஆளவந்தார் திருநாட் கொண்டாட்டம்:—

30—7—37 தேதி வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணி முதல் 8-30 மணிவரை சங்கக்காரியாலயத்தில் ஸ்ரீஉபவே குரிச்சி ஸ்ரீநிவாஸ வேதாந்தாசார் ஸ்வாமி 'ஸ்ரீ ஆளவந்தார் வைபவம்' எனும் விஷயம்பற்றி அதிரமணீயமாய் ஸங்க்ரஹமாய் உள்ளங்கவரும்படி உபந்யசித்தார்.

பிரபலர்கள் பிரிவாற்றமை பிரவசனம்:—

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம், அகில இந்திய பிராஹ்மண மஹா

ஸபை, சென்னை வர்ணாச்ரமஸ்வராஜ்ய சங்கம் இவற்றின் ஆதரவில் 6—8—37 தேதி வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணிக்கு ஸ்ரீரங்க விலாசத்தில் தமிழ்ச்சங்க வித்துவானும் திகழ்ந்த தில்லையம்பூர் பண்டித பூஷணம் ஸ்ரீஉபவே இராமபத்ர சக்ரவர்த்தியாசார் ஸ்வாமியின் நிர்யாணாநுதாபக் கூட்டம் ஆரம்பமாகியது. ஸ்ரீமான் ஆர். ராமஸ்வாமி அய்யங்காரவர்கள் தலைமை வஹித்தார். ஸ்ரீமான்கள் ஆர். கேசவய்யங்காரவர்கள், யன். ஸ்ரீநிவாஸாசாரியார், யம். யம். அனந்த ராவ், வி. யம். ஷண்முக சுந்தர முதலியார், பெரும்பாக்கம் கிருஷ்ணமாசாரியார், திருப்பதி ஸ்வாமி, குரிச்சி ஸ்ரீநிவாஸ வேதாந்தாசாரியார், யஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார், யஸ். குமாரசாமி செட்டியார், டி. யஸ். ராமஸ்வாமி ஐயர், ஸ்ரீரங்கம் சடகோபாசாரியார், காரியதரிசி முதலியோர் பெரியாரின் குணங்களை விரிவாக எடுத்துரைத்தனர். இதன் முழு விவரங்களை இந்து நேசன் புஸ்தகம் 36, இலக்கம் 33, 34ல் விரிவாகக் கண்டு கொள்க.

ஞாபகார்த்த உபந்யாஸங்கள்:—

சங்க வித்துவானும் திகழ்ந்த பண்டித பூஷணம் தில்லையம்பூர் ஸ்வாமியின் ஞாபகார்த்தமாக திருவாடிப்பூரம் முதல் ஸ்வாதிவரை ஐந்து தினங்கள் ஸ்ரீரங்க விலாசத்தில் அடியிற்கண்டபடி உபந்யாசங்கள் நடந்தன. 9—8—37தேதி பகவத்விஷயம் கீரனூர் நரஸிம்மாசாரியார் ஸ்ரீஆண்டாள் வைபவம்; 10தேதி அடியாரால் 'திருப்பாவை ஸாரார்த்தம்; 11தேதி பண்டித திருவாலி ராமாநுஜாசார் 'மார்கழி நீராட்டம்; 12தேதி ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார், 'ஆண்டாளும் தமிழும்; 13தேதி ஸ்ரீஉபவே ஸ்ரீரங்கம் சடகோபாசார் ஸ்வாமி, 'ஸ்ரீஆண்டாள் திருக்கல்யாணம.

ஸ்ரீசுந்தரமூர்த்தி நாயனுர் திருநாட் கொண்டாட்டம்:—

15—8—37தேதி ஸ்ரீரங்க விலாசத்தில் மாலை 6-30 மணிமுதல் 8-30 மணிவரை 'ஸ்ரீசுந்தரர் வைபவம்' எனும் விஷயம்பற்றி ஸ்ரீமான் கயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியாரவர்கள் சேக்கிழார் பெரிய புராணத்தை அநுஸரித்து வெகு அழகாக பக்திரசம் ததும்பும்படியாக கேட்பவர் மனம உருக இனிய செந்தமிழில் அரியதோர் உபந்யாஸம் செய்தார்.

உபாகர்மதினக் கொண்டாட்டம்:—

அகில இந்திய பிராஹ்மண மஹாஸபை, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம் இவற்றின் ஆதரவில் 21—8—37 தேதி சனிக்கிழமை மாலை 4-மணி முதல் 6மணிவரை ஸ்ரீமான் குறிஞ்சிப்பாடி யஸ். துரைசாமி அய்யங்காரவர்கள் 'ஸ்ரீவேத வைபவம்' எனும விஷயம பற்றியும ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்காரவர்கள் 'காயத்ரீ மஹிமை' எனும் விஷயம்பற்றியும் மிகவரிய உபந்யாசங்கள் செய்தனர்.

ஸ்ரீஜயந்தி மஹோத்ஸவக் கொண்டாட்டம்:—

சங்கக் காரியாலயத்தில் இக்கொண்டாட்டம் அடியிற்கண்ட விபரப்படி நடந்தது. 29—8—37 தேதி மாலை 4 மணி முதல் 5-30 மணிவரை

ஸ்ரீஉபவே ஆர். கேசவய்யங்கார், 'கண்ணனும் ஆண்டாளும்'; 30 தேதி மாலை 6-30 மணி முதல் 8 வரை பண்டித திருவாலி ராமாநுஜாசாரியார், 'சங்க நூற்கண்ணன்; 31தேதி மாலை 6-30 மணிமுதல் 8-30 மணிவரை பிரம்மஸ்ரீ செல்வித யதுநாதாசாரியார், 'கண்ணனும் மத்வாசாரியாரும்'; 1—9—37தேதி மாலை 6-30 மணிமுதல் 8 மணிவரை பகவத் விஷயம் கிணார் நரஸிம்மாசாரியார், 'கண்ணனும் காரி மாறனும்'; 2தேதி மாலை 6-30முதல் 9 மணிவரை திருக்குடந்தை ஸ்ரீபாரங்குச பக்த சபை உபந்யாசகர் ஸ்ரீஉபவே இளைய வல்லி ஸ்ரீநிவாஸாசார ஸ்வாமி, 'கண்ணனும் ஆழ்வார்களும்'; 3தேதி மாலை 6-30முதல் 8 மணிவரை ஸ்ரீஉபவே குரிச்சி ஸ்ரீநிவாஸ வேதாந்தாசார்யார், 'கண்ணனும் தேசிகனும்'; 4தேதி மாலை 6-30 மணிமுதல் 8வரை ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்காரவர்கள் 'கண்ணனும் தென்றமிழும்'; 5தேதி மாலை 6-30 மணிமுதல் 8-30 மணிவரை பந்தல்குடி திருமலை ஐயங்கார் 'கண்ணன் கழலிணை'.

விசேஷப்பொதுக்கூட்டம்:—

9—9—37தேதி மாலை 6-30 மணிக்கு சங்கக் காரியாலயத்தில் ஒரு விசேஷப் பொதுக் கூட்டம் நடந்தது. அட்வொகேட் வி. நரஸிம்மாசாரியார் தலைமை வஹித்தார். ஹிந்தியைக் கட்டாயப் படிப்பாக வைக்கும் விஷயத்தில் சரியான முடிவு செய்யப்பட்டது. ஸ்ரீமான்கள் ஆர். கேசவய்யங்கார், பண்டித திருவாலி ராமாநுஜாசாரியார், வடகரை ராமாநுஜாசாரியார், வித்வான் ஸ்ரீரங்கம் சடகோபாசாரியார், ஸ்ரீநிவாஸய்யங்கார் முதலியோர் பேசினார்கள். இதன் முழு விவரங்களை இந்த நேசன் புஸ்தகம் 36 இலக்கம் 37ல் கண்டு களிக்க.

ஸ்ரீவாமனஜயந்திக் கொண்டாட்டம்:—

சங்கத்தின் ஆதரவில் 17—9—37தேதி இரவு 7 மணிமுதல் 9 மணிவரை ஸ்ரீ அஹோபில மடத்தில் 'திருத்தாடாளன் பெருமை' எனும் விஷயம்பற்றி ஸ்ரீஉபவே குரிச்சி ஸ்ரீநிவாஸ வேதாந்தாசாரியார் உபந்யசித்தார்.

ஸ்ரீஆதிவண் சடகோபயதீந்திர மஹாதேசிகன் மஹோத்ஸவக்கொண்டாட்டம்:—

சங்கக் காரியாலயத்தில் அடியிற்கண்ட விபரப்படி உபந்யாசங்கள் நடந்தன. பிரதி தினம் மாலை 6-30 மணிமுதல் 8, 8-30, 9 மணிவரை நடந்தன. 1—10—37 தேதி ஸ்ரீமான் குரிச்சி ஸ்ரீநிவாஸ வேதாந்தாசாரியார், 'சிங்கப்பிரான் பெருமை'; 2தேதி ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார், 'சிங்கவேள் குன்றத்தான்'; 3உ ஸ்ரீமான் ப. ஒ. திருமலை ஐயங்கார், 'ஸந்நிதிசிஷ்யன்' 4 தேதி ஸ்ரீமான் வி. நரஸிம்மாசாரியார், பாகவததர்மம் 5தேதி ஸ்ரீமான் ஆர். சந்தானகிருஷ்ணய்யங்கார், 'கம்பர்புகழும் சடகோபர்; 6தேதி ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார், 'ஈட்டின் பெருமை' 7தேதி ஸ்ரீமான் ஆர். சந்தானகிருஷ்ணய்யங்கார், ஸ்ரீவைஷ்ணவலக்ஷணம்' 8 தேதி ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ வேதாந்தாசாரியார், 'முத்தேசிகர்'. 9தேதி ஸ்ரீமான் ஆர். கேச

வய்யங்கார் 'ஓ பாடியப்பொருள்' 10தேதி ஸ்ரீமான் குரிஞ்சிப்பாடி துரைஸாமி ஐயங்கார், ஸ்ரீமஹாதேசிகன் வைபவம்',

ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகர் மஹோத்ஸவக்கொண்டாட்டம்:—

அடியிற்கண்டவிபரப்படி சங்கக் காரியாலயத்தில் உபந்யாஸங்கள் நடந்தன. 14—10—37 ஸ்ரீஉபவே ராச்சியார் கோவில் நடாதூர் கிருஷ்ணமாசார் ஸ்வாமி 'ஸ்ரீலக்ஷ்மிந்ருஸிம்ஹன் பிரபாவம்' 15தேதி ஸ்ரீமான ஸ்ரீநிவாஸ வேதாந்தாசார், ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரம்' 16தேதி ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார், 'ஸ்ரீபாதுகாஸஹஸ்ரமும் யாதவாப்யுதயமும், 17தேதி ஸ்ரீமான் ப. ரெ. திருமலை ஐயங்கார, 'தேசிகரும் கம்பரும்' 18தேதி ஸ்ரீமான ஆர். கேசவய்யங்கார், 'பரமதபங்கம்; 19தேதி ஸ்ரீஉபவே. ஆவியூர் ஸ்ரீநிவாஸாசார் ஸ்வாமி, 'அபயப்ரதான ஸாரம்' 20தேதி ஸ்ரீமான். ஆர். கேசவய்யங்கார் பரமபத ஸோபானம் 21தேதி ஸ்ரீமான் வி. நரஸிம்மாசாரியார், பரமபத ஸோபானம்' 21தேதி ஸ்ரீமான் வி. நரஸிம்மாசாரியார், 'தேசிகரும் ஆழ்வாரும்' 22தேதி ஸ்ரீமான ஸ்ரீநிவாஸவேதாந்தாசாரியார், அடைக்கலப்பத்து; 23தேதி ஸ்ரீமான். ஆர். கேசவய்யங்கார் தேசிகனும் திருமங்கை மன்னனும்.

மூன்றாவது ஆண்டு நிறைவு விழா:—

சங்கக் காரியதரிசியின் ஜேஷ்ட குமாரனான சிரஞ்சீவி ரங்கனுக்கு 20—10—37 மூன்றாவது ஆண்டு நிறைவுவிழா ஸ்ரீரங்க விலாசத்தில் சிறப்பாக நடந்தது.

ஸ்ரீமணவாளமாமுனிகள் மஹோத்ஸவக்கொண்டாட்டம்:—

சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீவானமாமலை மடத்தில் அடியிற்கண்ட விபரப்படி உபந்யாசங்கள் நடைபெற்றன. 7-11-37 ஸ்ரீமான் வி. நரஸிம்மாசாரியார், 'திருவாய்மொழி நூற்றந்தாதி' 8தேதி ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார் ஆர்த்திப்ரபந்தம், 9தேதி ஸ்ரீமான் ஆர் சந்தானகிருஷ்ணய்யங்கார், உபதேச ரத்தினமாலை 10தேதி ஸ்ரீஉபவே வித்வான் ஸ்ரீரங்கம் சடகோபாசார் ஸ்வாமி 'மணவாளமாமுனிகளும் ஆர்த்தியும்'; 11தேதி ஸ்ரீமான் சந்தான கிருஷ்ணய்யங்கார், ஸ்ரீபாதுகாபட்டாபிஷேகம்' 12தேதி ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ வேதாந்தாசார், 'திருவெட்டெழுத்து 13 தேதி ஸ்ரீமான் ப. ரெ. திருமலை ஐயங்கார், 'மணவாளமாமுனிகளும் மறைமுடித்தேசிகனும்' 14-தேதி ஸ்ரீமான் ஆர். சந்தானகிருஷ்ணய்யங்கார், 'அமலன் அரு?' 25தேதி பண்டித திருவாலி ராமானுஜாசாரியார் 'மணவாளமாமுனிகள் உரைநடை; 16தேதி ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார், 'யதிராஜவிம்சதி.'

திருமங்கையாழ்வார் திருநாட்கொண்டாட்டம்:—

18—11—37 வியாழக்கிழமை ஸ்ரீவானமாமலை மடத்தில் சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார் 'கலியன்கவித்திறம்' எனும் விஷயம் பற்றியும் 20-தேதி சனிக்கிழமை பண்டித திரு ஈலிராமானுஜாசார் 'திருமடல்கள்' எனும் விஷயம் பற்றியும் உபந்யசித்தனர்.

19—11—37 வெள்ளிக்கிழமை சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீவானமாலை மடத்தில் ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ வேதாந்தாங்கரால் 'திருப்பாணாழ்வார் வைபவம்' நன்குஉபந்யஸிக்கப்பட்டது.

திருப்பாணாழ்வார் திருநாட்கொண்டாட்டம்:—

திருவல்லிக்கேணி சாமராவ் ஸ்கூல் மெத்தையில் சென்னை உத்தியோகத்தார் சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீஉபவே ஸ்ரீரங்கம் வித்வான் சடகோபாசார் ஸ்வாமியால் 7—8—37 ஆரம்பித்து நடத்தப்பட்டு வந்த ஸ்ரீராமாயணஸீரிவில் 14—11—37 ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீராமராஜ்யபட்டாபிஷேக சரித்திரம் வெகுவிமரிசையாக நடந்தது அவ்வமயம் தமிழ்ச்சங்கக் காரியதரிசி ஐந்து பாக்கள்பாடி விளக்கினர். ஸ்ரீமான்கள் ஆர். ராமஸ்வாமி ஐயங்கார் வி. கே. பார்த்தசாரதி ஐயங்கார், திருமலாசாரியார், ஸ்ரீஉபமேவ நாச்சியார் கோயில் நடாதூர் கிருஷ்ணமாசார் ஸ்வாமி முதலியோர் புகழுரைகள் கூறினர். ஊர்வலம், நாதஸ்வரக்கச்சேரி சிறப்பாக நடந்தன, சங்கத்தார் பரமகாருணிகாரண பெரியவாச்சான்பிள்ளை பாசுரப்படி ராமாயணத்தை அச்சிட்டு அனைவருக்கும் வழங்கினர். எல்லோரும் குதூகலித்து ஆநந்த ஸாகரத்தில் மூழ்கினர்.

ப. வெ. திருமலை ஐயங்கார், காரியதரிசி.

முக்கிய அறிவிப்பு.

இத்துடன் வகுளமாலையின் ஒன்றாந்தொகுதி பதினொன்று பகுதிகள் வெளிவந்துள்ளன. அடுத்த ஜனவரி மாதப்பகுதியுடன் முதலாவதாண்டு முற்றுப்பெறும். இப்பத்திரிகையின் அபிமானிகள் இவ்வருட சந்தாத்தொகையை டிசம்பர் ௴ 31உக்குள் அடியிற்கண்ட விலாசத்துக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் தங்கள் இஷ்டமித்ர பந்துக்களையும் இதன் சந்தாதாராகச்சேரும்படி செய்யவேணும். தமிழபிவிருத்திக்காக பாடுபட்டு வரும் இம்மாலையை அனைவரும் அடைந்து இன்புறுவாராக.

ப. வெ. திருமலை ஐயங்கார்,
மானேஜர், வகுளமாலை,
42-ஏ, வெங்கடரங்கம் பிள்ளை தெரு,
திருவல்லிக்கேணி.

மேற்கண்ட விலாசத்தில் 'தேசிகர் நூற்றந்தாதி' (விலை அணா ஒன்று; 14-பக்கங்களடங்கியது) கிடைக்கும். தேசிகாபிமானிகளிடம் அவசியம் இருக்கவேண்டிய நூல் இது.

ஸ்ரீ:

திருவல்லிக்கேணித்தமிழ்ச் சங்கம்.

சங்க வித்வான்கள்.
1. ஸ்ரீ உபவே தில்லையம்பூர் வெங்கடாசார்ய ஸ்வாமி.
2. ஸேது ஸமஸ்தான வித்வான் ஸ்ரீ உபவே. ஆர். ராகவய்யங்கார் ஸ்வாமி.
3. ஸ்ரீ உபவே மு. ராகவய்யங்கார் ஸ்வாமி.
4. ஸ்ரீ உபவே. ஸ்ரீரங்கம் சடகோபாசாரிய ஸ்வாமி (மாம்பலம்).

தலைவர் ... ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்காரவர்கள்.

உப தலைவர்கள்....
1. ஸ்ரீமான் வி. நரஸிம்மாசாரியாரவர்கள்.
2. ,, ஆர். சந்தானகிருஷ்ணய்யங்காரவர்கள்.
3. ,, யஸ். லக்ஷ்மி நரஸிம்மாசாரியாரவர்கள்.

காரியதரிசியும், பொக்கிஷதாரரும். ஸ்ரீமான் ப. ரெ. திருமலை ஐயங்கார்.

கமிட்டி மெம்பர்கள்.
1. ஸ்ரீமான் ஆர். இராமசாமி ஐயங்காரவர்கள்.
2. ,, யஸ். கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள்.
3. ,, டி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்காரவர்கள்.
4. ,, ஏ. வெங்கடாசாரியாரவர்கள்.
5. ,, வி. ஷண்முகசுந்தர முதலியாரவர்கள்.
6. ,, யஸ். குமாரசாமி செட்டியாரவர்கள்.
7. ,, இ. கே. சபாபதி முதலியாரவர்கள்.

காரியாலயம் ... 42-ஏ. வெங்கடரங்கம் பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி.

முக்கிய நோக்கங்கள்.
1. தமிழைப் பரவச் செய்த.
2. வாரந்தோறும் திருக்குறள் கம்பராமாயணம் முதலிய தமிழ் வகுப்புகள் இலவசமாக நடத்த.
3. தமிழ்ப் பெரியார் ஜன்ம தினங்களை கொண்டாட.
4. தமிழ் வித்வான் பரீக்ஷைக்குப் போகுமவர்களுக்கு வேண்டிய ஒத்தாசை செய்தல்.
5. சங்கவெளியீடாக ஒரு பத்திரிகை நடத்தல்.
6. பிராசீனசம்ப்ரதாய முறைகளைக் காப்பாற்றத்தக்க ஏற்பாடு செய்தல்.
7. புலவர்களைப் போற்றுத.
8. திரு நாட்களை நன்கு கொண்டாடல்.

ப. ரெ. திருமலை ஐயங்கார்,
காரியதரிசி.

Printed at the Lakshmi Kantha Press, 495, High Road, Triplicane and published by P. R. Tirumalai Ayyangar at 42-a, Venkatrangam Pillai St., Triplicane, Madras.